கிறது. அரசு எடுத்த இந்தத் தீவிர நடவடிக்கைகளின் காரணமாகத்தான் இந்த அளவுக்குக் குறைவாக பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இப்படி நோயே வரக்கூடாதென்றால், எப்போதுமே வறட்சியோ தண்ணீர் பஞ்சமோ ஏற்படக் கூடாது.

Assignment of House-sites and Cultivable Lands to Villagers.

* 88. Q.—THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Commercial Taxes be pleased to state:

(a) whether it is a fact that 32 families residing in Bethelpuram Village near Parapala Dam site in Palani Taluk, who had come from various villages for kumari cultivation on promises of assignment of house-sites and cultivable lands have not been assigned any house-sites or other lands;

(b) whether they offered peaceful Satyagraha during April–May 1975, to secure fulfilment of the promises made to them; and

(c) the details and the outcome thereof?

கிராமவாசிகளுக்கு வீட்டு மனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரல்.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வீட்டுமனைகளும், வேளாண்மை நிலங்களும் ஒதுக்கித்தரப்படும் என்று அளித்த உறுதிமொழிகளின்பேரில் பல்வேறு கிராமங்களிலிருந்து வந்து குமரி சாகுபடி செய்வதற்காக பழனி வட்டம், பரப்பலா அணைக்கட்டுப் பகுதிக்கு அருகேயுள்ள பெதல்புரம் கிராமத்தில் குடியேறியுள்ள 32 குடும்பங்களுக்கு, வீட்டுமனைகள் அல்லது ஏனைய நிலங்கள் ஒதுக்கித்தரப்படவில்லை என்பது உண்மையா?

(இ) அவர்களுக்குக் கொடுத்த உறுதிமொழிகளை நிறைவேற்றுமாறு கோரி 1975-ஆம் ஆண்டு எப்ரல்-மே திங்களில் அமைதியான முறையில் சத்தியாக்கிரகம் செய்தார்களா?

(உ) அதன் விவரங்களும், அதன் விளைவும் யாவை?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) இல்லை.

(இ) இல்லை.

(உ) கேள்விக்கு இடமில்லை.

Bus-Stand in Andimadam Panchayat.

* 89. Q.—THIRU A. BALASUBRAMANIAM (on behalf of THIRU Y. VENKATESWARA DIKSHIDAR): Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) whether it is a fact that the new bus-stand in Andimadam Panchayat, Tiruchirappalli District is not in use even though the construction has been completed; and

(*b*) if so, the reasons therefor?

ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம்.

திரு. அ. பாலசுப்ரமணியம் (திரு. ஒய். வெங்கடேஸ்வர திக்ஷிதர் சார்பில்): மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) திருச்சி மாவட்டத்தில் ஆண்டி மடம் ஊராட்சியில் பேருந்து நிலையம் கட்டப்பட்டும் அது பயன்படுத்தப்படாமல் இருப்பது உண்மையா?

(இ) ஆமெனில், காரணம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) & (இ) ஆண்டி மடம் ஊராட்சி எல்லையில் பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு சில வசதிகள் மேலும் விதிகளின்படி செய்யப்பட வேண்டியிருப்பதால், பயன்படுத்தப் படாமல் இருக்கிறது. பேருந்து நிலையத்தை விரைவில் பயன்படுத்துவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

Auciton of Bus-Stand, Cart-Stand, etc., in Tindivanam Municipality.

* 90 Q.—THIRU A. THANGAVEL: Will the Hon. the Minister for Local Administration be pleased to state:

(*a*) the amount derived from the auction of the bus-stand, cart-stand and fish and mutton market in the Tindivanam Municipality during the years 1971–72, 1972–73, 1973–74 and and 1974–75, item-wise;

(*b*) the amount due, item-wise, from the successful bidder during every year; and

(*c*) the reason therefor?